# பெரியாழ்வார் திருமொழி 3-9
## என்னாதன்

(க்ருஷ்ணாவதார ராமாவதாரங்களின் குணசேஷ்டிதங்களை இரண்டு தோழியர் எதிரெதிராகக் கூறி உந்தி பறத்தல்)

0307 * என்னாதன் தேவிக்கு * அன்று இன்பப்பூ ஈயாதாள் *
தன் நாதன் காணவே * தண்பூ மரத்தினை **
வன்னாதப் புள்ளால் * வலியப் பறித்திட்ட*
என்னாதன் வண்மையைப் பாடிப்பற * எம்பிரான் வண்மையைப்
பாடிப்பற (1)

0308 என்வில்வலி கண்டு * போவென்று எதிர் வந்தான் *
தன் வில்லினோடும் * தவத்தை எதிர்வாங்கி **
முன் வில்வலித்து * முதுபெண் உயிருண்டான் *
தன் வில்லின் வன்மையைப் பாடிப்பற * தாசரதி தன்மையைப்
பாடிப்பற (2)

0309 உருப்பிணி நங்கையைத் * தேரேற்றிக் கொண்டு *
விருப்புற்று அங்கேக * விரைந்து எதிர் வந்து **
செருக்குற்றான் * வீரம் சிதைய * தலையைச்
சிரைத்திட்டான் வன்மையைப் பாடிப்பற * தேவகி சிங்கத்தைப்
பாடிப்பற (3)

0310 மாற்றுத் தாய் சென்று * வனம் போகே என்றிட *
ஈற்றுத் தாய் பின் தொடர்ந்து * எம்பிரான் என்றழ **
கூற்றுத் தாய் சொல்லக் * கொடிய வனம் போன,
சீற்றமிலாதானைப் பாடிப்பற * சீதை மணாளனைப் பாடிப்பற (4)

0311 பஞ்சவர் தூதனாய்ப் * பாரதம் கைசெய்து *
நஞ்சுமிழ் நாகம் கிடந்த * நற்பொய்கை புக்கு **
அஞ்சப் பணத்தின்மேல் * பாய்ந்திட்டு அருள் செய்த *
அஞ்சன வண்ணனைப் பாடிப்பற * அசோதைதன் சிங்கத்தைப்
பாடிப்பற (5)

0312 முடியொன்றி * மூவுலகங்களும் ஆண்டு * உன்
அடியேற்கு அருளென்று * அவன்பின் தொடர்ந்த **
படியில் குணத்துப் * பரதநம்பிக்கு * அன்று
அடிநிலை ஈந்தானைப் பாடிப்பற * அயோத்தியர் கோமானைப்
பாடிப்பற (6)

0313 காளியன் பொய்கை * கலங்கப் பாய்ந்திட்டு * அவன்
நீள்முடி ஐந்திலும் * நின்று நடம் செய்து **
மீள அவனுக்கு * அருள் செய்த வித்தகன் *
தோள்வலி வீரமே பாடிப்பற * தூமணி வண்ணனைப் பாடிப்பற (7)

0314 தார்க்கு இளந்தம்பிக்கு * அரசீந்து * தண்டகம்
நூற்றவள் சொற்கொண்டு * போகி நுடங்கிடைச் **
சூர்ப்பணகாவைச் * செவியொடு மூக்கு * அவள்
ஆர்க்க அரிந்தானைப் பாடிப்பற * அயோத்திக்கரசனைப்
பாடிப்பற (8)

0315 மாயச் சகடம் உதைத்து * மருதிறுத்து *
ஆயர்களோடு போய் * ஆநிரை காத்து ** அணி
வேயின் குழலூதி * வித்தகனாய் நின்ற *
ஆயர்கள் ஏற்றினைப் பாடிப்பற * ஆநிரை மேய்த்தானைப்
பாடிப்பற (9)

0316 காரார் கடலை * அடைத்திட்டு இலங்கை புக்கு *
ஓராதான் பொன்முடி * ஒன்பதோடொன்றையும் **
நேரா அவன் தம்பிக்கே * நீள் அரசீந்த *
ஆராவமுதனைப் பாடிப்பற * அயோத்தியர் வேந்தனைப்
பாடிப்பற (10)

0317 * நந்தன் மதலையைக் * காகுத்தனை நவின்று *
உந்தி பறந்த * ஒளியிழையார்கள் சொல் **
செந்தமிழ்த் தென்புதுவை * விட்டுசித்தன் சொல் *
ஐந்தினோடைந்தும் வல்லார்க்கு * அல்லல் இல்லையே (11)